www.padippakam.com

மலையக மக்கள் முன்னணியின்
உதயம்

# ஒரு வரலாற்று நிர்ப்பந்தம்



பெ. சந்திரசேகரன்
ஆற்றிய உரை

மலையக மக்கள் முன்னணி வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# மலையக மக்கள் முன்னணியின் உதயம்

# ஒரு வரலாற்று நிர்ப்பந்தம்

ஆரம்பத்தில் மலையகத்தில் தொழிற்சங்கத்தின் தேவை தவிர்க்கமுடியாததாக இருந்தது. அதனால்தான் காலத்துக்குக் காலம் பல தொழிற்சங்கங்கள் மக்கள் ஆதரவோடு உருவாகின. மலையக மக்களுக்கு அரசியல் தேவை அந்த நேரத்தில் இருக்கவில்லை. தொழில் ரீதியாக பாதிக்கப்படும்போது அதிலிருந்து பாதுகாப்புப் பெறவும் நிர்வாகத்தின் அடக்குமுறையிலிருந்து நிவாரணம் பெறவும் தொழிற் சங்கத்தை நாடவேண்டிய நிலை ஏற்பட்டது.

அரசியல், கல்வி, பொருளாதார உரிமைகளைப் பற்றியோ வேறு எந்தவிதமான அடிப்படை உரிமைகளைப் பற்றியோ எவ்வித எதிர்பார்ப்பும் இவர்களுக்கு ஏற்படவில்லை. தொழிற்சங்கங்களும் மக்களின் அன்றாட தேவைகளையும், எதிர்பார்ப்புகளையும் ஈடுசெய்ய முயற்சிக்கின்ற அமைப்பாகவே இருந்துவந்தன. அரசியல் ரீதியான தெளிவுகளையோ சிந்தனை மாற்றங்களையோ ஏற்படுத்த இத் தொழிற்சங்கங்கள் முயற்சிக்கவில்லை. அதற்கான அவசியம் இருப்பதாகக் கூட இவர்கள் உணரவில்லை.

## தொழிற்சங்கங்களுக்கு அரசியல் சிந்தனை இருக்கவில்லை

மலையக மக்களின் எதிர்காலம் இந்நாட்டில் எப்படி அமையவேண்டுமென்பதை தொலை நோக்குப் பார்வையில் சிந்தித்து செயற்படக் கூடிய அரசியல் சிந்தனையாளர்களோ, அரசியலமைப்புகளோ ஆரம்ப காலத்தில் உருவாகவில்லை.

தொழிற்சங்கத் தலைவர்களும் தோட்டத் துரைமார்களைப் போல மக்களுடைய எஜமானர்களாகவே கணிக்



படிப்பகம்

www.padippakam.com

கப்பட்டார்கள். மக்களின் அன்றாடத் தொழிற் பிரச்சினை களைத் தீர்த்துவைக்கும் இரட்சகர்களாகவே கருதப்பட் டார்கள்.

இந்நிலையில் தொழிற் பிணக்குகளும் நிர்வாகங்களுக் கிடையில் ஏற்பட்ட முரண்பாடுகளும் தீர்க்கப்படுவதற் காக பல போராட்டங்கள் கூட வெற்றிகரமாக நடந்தே றின. ஆனால் மலையக மக்கள் அரசியல் அந்தஸ்தையும் உரிமையையும் பெறுவதற்கோ, தங்களின் எதிர்காலத்தை உறுதி செய்து கொள்வதற்கோ எதுவித சிறு போராட்டங் கள்கூட தலையெடுக்கவில்லை.

இதனை மக்களுக்கு உணர்த்தவேண்டிய பொறுப்பு தம் தலைவர்களுக்கு இருக்கின்றதென்பதைக்கூட மக்கள் புரிந்துகொள்ளவில்லை.

மக்களுக்கு அரசியல் சிந்தனையையும் தன்னம்பிக்கை யையும் தைரியத்தையும் அளிக்கவேண்டிய தலைவர்கள் நெருக்கடியான காலகட்டத்திலும் இனக் கலவரங்கள் தலை யெடுத்த சந்தர்ப்பங்களிலும் செயலிழந்து ஸ்தம்பிதம் அடைந்து நின்றார்கள்.

வந்தேறு குடிகளாகவும் சிறுபான்மை மக்களாகவும் இந்நாட்டில் வாழும் மலையக மக்களுக்கு இத்தகைய நெருக் கடிகள் ஏற்படுவது இயல்பானதும் தவிர்க்க இயலாததும் என்ற கருத்தையே மலையக மக்கள் மனதில் பதியவைத் தார்கள். சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் தன்மானத் தோடும் வாழவேண்டுமாயின் திரும்பவும் இந்தியா செல் வதே வழி என்ற எண்ணம் மக்கள் மனதில் வேரூன்றி வளர்ந்தது.

## படித்த இளைஞர்களின் அரசியல் பிரவேசம்

இந்நிலையில்தான் தொழிற்சங்கங்கள் அரசியல் ரீதி யாக மக்களை வழிநடாத்தி செல்லவோ அல்லது புதிய சிந்தனைகளை வளர்த்தெடுத்து மறுமலர்ச்சி காணவோ எப்போதுமே முயற்சி எடுக்காது என மலையகத்தில் தோன் றிய படித்த இளைஞர்கள் கூட்டம் உணர ஆரம்பித்தது. இதுபற்றி மக்களுக்கு விளக்கம் அளிக்கவும் இவர்கள் முயற் சித்தார்கள். இவ் விழிப்புணர்வு 1970களில் தோன்ற ஆரம் பித்தன.



படிப்பகம்

www.padippakam.com

1) மக்களை அரசியல் ரீதியாக சிந்திக்கவைக்கவேண்டும்.
2) மலையக மக்களின் உரிமைகள் எல்லாம் பெறப்படவேண்டும்.
3) மலையக மக்கள் இந்நாட்டில் வாழும் ஏனைய மக்களுக்கு நிகராக உயரவேண்டும்.
4) மலையக மக்களின் அடிமை வாழ்க்கை முறையை பாதுகாக்கும் பெருந்தோட்டத்துறை நிர்வாக அமைப்புக்கள் நிர்மூலமாக்கப்படல் வேண்டும்.

இதுபோன்ற கோஷங்கள் அந்த புத்தி ஜீவிகளால் எழுப்பப்பட்டன.

மலையக மக்கள் 'தோட்டக் காட்டான்', 'லயத்துக் காட்டான்', அல்லது யாழ்ப்பாண மக்களில் சிலர் கூறுவதுபோல் 'வடக்கத்தியான்' என்று சொல்லப்பட்டு வந்த காலகட்டத்தில், நாங்கள் மலைநாட்டவர் என்று சொல்லிக்கொள்வதை பெருமையாகக் கருதும் நிலை தோன்றத் தொடங்கியது. அதேபோல் மலைநாட்டுக்கு நாங்கள் சொந்தக்காரர்கள் என்று கூறுவதிலும் பெருமிதம்கொண்டனர், அந்த குரல் ஒலிப்பின் மூலம் சிந்தனை மாற்றம்— அல்லது ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியதில் இவர்களுக்கு இருக்கும் பங்கை வரலாறு மறுக்காது.

ஆனால் இவர்கள் விட்ட பிழை அல்லது பலவீனம் அவர்களைத் தொடர்ந்து அந்த செயற்பாட்டில் நிலைத்திருக்கச் செய்ய முடியாமல்போய்விட்டதெனக் கூறலாம். அவர்கள் படித்த மத்திய வகுப்பினர் மத்தியிலே தங்கள் கருத்து மாற்றங்களைத் தெளிவுபடுத்த முடிந்ததே தவிர, சாதாரண மக்கள் மத்தியில் செல்ல முடியவில்லை. கதைகள், கட்டுரைகள், கருத்தரங்குகள் மூலமாக தங்கள் கருத்தை வெளிப்படுத்தினார்களே தவிர, சாதாரண மக்கள் மத்தியில் செல்வாக்குப்பெற அவர்களால் முடியாமல் போயிற்று. மக்களோடு நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளக்கூடிய ஒரு வேலைத் திட்டத்தை வைத்



படிப்பகம்

www.padippakam.com

திரண்டதாக நாம் நப்பவில்லை. மலையகத்தைப் பொறுத்தவரையில் இது முதல் அத்தியாயம்! ஒரு மாபெரும் தொடக்கம்!!

சிறுபான்மை மக்கள் தங்கள் உரிமையைப் பெற்றுக் கொள்வது ஐக்கியப்பட்ட போராட்டத்தினால்தான் முடியும். இதை கடந்தகால உலகவரலாறுகள் நமக்கு உணர்த்துகின்றன. அரசாங்கத்தோடு தோழமை கொள்வதாலோ, அவர்களை தாஜா பண்ணுவதாலோ அல்லது அரசாங்கத்திலுள்ள தனிப்பட்ட ஒரு சிலரின் நட்பைப் பயன்படுத்துவதாலோதான் எமது பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் என்பதில்லை. நம்மீது பச்சாதாபப்பட்டோ இரக்கப்பட்டோ வழங்கப்படும் உரிமைகள் நிலைக்கமுடியாது. நட்பு ரீதியாக இருந்துகொண்டு கெஞ்சிக் கேட்பதாலும் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. அப்படி நட்போடு கூடிக்குலாவிய மலையக அமைப்புகள் கூட இன்று 13 வருடத்துக்குப் பின்னும் ஏமாற்றப்பட்டுவிட்டதாகவே கூறிக் கொள்கின்றார்கள்.

எனவே இந்த கறைபடிந்த வரலாற்றை மாற்றுவோம். மற்றவர்களின் தயவில் வாழவேண்டிய அடிமைக் கூட்டமல்ல நாம் என்பதை உலகத்திற்கு உணர்த்துவோம்,

உரிமை கேட்டால் மலையகத்தின் அமைதி அழியும் என்பது எம்மைக் கோழைகளாக்கும் வேலை! சிந்தனையற்ற மந்தைக் கூட்டமாக தொடர்ந்து வைத்திருக்கும் திட்டம்! உரிமைக்காக குரல்கொடுக்காத அடிமைக் கூட்டமல்ல—அநியாயத்தைத் தட்டிக் கேட்கும் வீர புருஷர்களே இன்று மலையகத்திற்குத் தேவை.

இத்தகைய மக்களால்தான் மலையகத்தில் புதிய சரித்திரத்தைப் படைக்க முடியும். புதிய சகாப்தத்தை ஏற்படுத்திய சிருஷ்டிகர்த்தாக்கள் என்ற பெருமை எமக்கெல்லாம் கிடைக்கவேண்டும்.

*மலையக மக்கள் முன்னணியில் அணி சேர்வோம்! மலையக சமுதாயத்தின் மாற்றத்தை உறுதி செய்வோம்! இது எமது சமுதாய கடமையென்ற எண்ணத்தோடு புதுப் பயணத்தை ஆரம்பிப்போம்!*

---

PRINTED BY THE KUMARAN PRESS 201 DAM STREET COLOMBO 12

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்